தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
மக்கள் தொடர்பு அலுவலகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் ஜெ. வெங்கட் பிரபு Ph.D.,
மக்கள் தொடர்பு அலுவலர் &
பேராசிரியர் (வேளாண் விரிவாக்கம்)
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 6-4-2015

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**வேளாண்மைப் பல்கலையில் சமுதாய நற்பணி மன்ற விழா கொண்டாடப்பட்டது**

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் சமுதாய நற்பணி மன்றத்தின் 61வது ஆண்டு விழா 3-4-2015 வெள்ளிக்கிழமையன்று பல்கலை வளாகத்தில் நடைபெற்றது.

இவ்விழாவிற்கு காந்திகிராம் ஊரக பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் முனைவர் திரு. ந. மார்க்கண்டன் அவர்கள் சிறப்புரை ஆற்றி மாணவர்களுக்கு பரிசுகளை வழங்கினார்.

முனைவர்.ச.மகிமைராஜா முதன்மையர் வேளாண்மை அவர்கள் தலைமையுரை ஆற்றினார். மேலும் இவ்விழாவிற்கு பா.செ.பாண்டியன், இயக்குநர், நீர் தொழில்நுட்ப மையம் மற்றும் முனைவர். சி. செயந்தி இயக்குநர், பயிர் மேலாண்மை அவர்களும் வாழ்த்துரை வழங்கினர்.

மேலும் இவ்விழாவில் 2013-14 ஆம் கல்வியாண்டில் 10,12 ஆம் வகுப்பு இம்மன்றத்தில் பயின்று முதல் மூன்று மதிப்பெண்கள் பெற்ற மாணவர்களுக்குப் பரிசும் ஊக்கத்தொகையும் வழங்கப்பட்டது. மேலும் ஆண்டறிக்கையை செயலர்.ந.சந்தோஷ் குமார் வாசித்தார். இவ்விழாவில் மாணவ மன்ற ஆலோசகர், விடுதிக்காப்பாளர், மன்ற ஒருங்கிணைப்பாளர்கள், முன்னாள் இந்நாள் உறுப்பினர்கள் பங்கு கொண்டனர். குழந்தைகளின் கலை நிகழ்ச்சிகளுடன் விழா இனிதே நிறைவுற்றது.

மக்கள் தொடர்பு அலுவலர்